மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது ரூ. 85 உணவுக்காகவும், ரூ. 2 இதரச் செலவுக்காகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இப்போது இருக்கின்ற நிதிநிலையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இதரச் செலவுக்காக ரூ. 5-ம், உணவுக்காக ரூ. 150-ம் கொடுக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதற்கு மேல் அரசு மேற்கொண்டு தொகை கொடுக்க முடியாத நிலையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏழைகளின் பால் நல்ல கருத்துக்களையும், எண்ணங்களையும் கொண்டு இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே கருணை உள்ளம் கொண்டு முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி ஏழை, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களினுடைய நலனை மனதிலே கொண்டு இந்த அரசு அதிகமான தொகையினை, நான் கேட்ட தொகையினை மாணவர்களுக்கு வழங்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று இருக்கின்ற நிதிநிலையின் சூழ்நிலையின் காரணமாக இதற்கு மேற்கொண்டு பணம் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மங்கநல்லூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள்.

223—(*வினா எண். 553) திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மங்கநல்லூர் அரசு மருத்துவமனைக்குப் போதுமான மருத்துவர்கள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம் அரசு மருத்துவமனையில் இப்போது 2 மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குத்தாலம் தொகுதியிலுள்ள மங்கநல்லூர் அரசு மருந்தகம் தற்போது ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்

1989 மே 5]

பட்டுள்ளதாகத் தெரிகிறது. அங்கு இரண்டு மருத்துவர்கள் மட்டும் பணியிலே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மேலும் அங்கு எத்தனை பணியாளர்கள் பணி செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதையும், அந்த மருத்துவமனைக்கு வரக் கூடிய உள்நோயாளிகள், வெளிப்புற நோயாளிகள் எத்தனை பேர் என்பதையும், அதற்குப் போதுமான கட்டிட வசதி உள்ளதா ; அதை மேலும் விரிவாக்குவதற்காக திட்டங்கள் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் மருத்துவரும், ஒரு ஆண் மருத்துவரும், ஆக இரண்டு பேர் அங்கே நியமிக்கப்பட்டு பணியாற்றிக்கொண் டிருக்கிறார்கள். அவர் கூறுகின்ற மற்ற விவரங்களுக்கு தனிக் கேள்வி போடுவாரேயானால் விவரமாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சில தினங்களுக்கு முன்பாக அந்த மருத்துவமனையைப் பார்வையிடச் சென்றேன். அங்கு அப்போது ஒருவர்கூட இல்லை. சட்டிடம் பூட்டப்பட்டு இருந்தது. நான் அதைக் கூட அமைச்சர் அவர்களிடத்தில் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து இருக்கிறேன், கட்டிடத்தினுடைய பல பகுதிகள் பழுதுபட்டு இடிந்து விழக்கூடிய நிலையிலே இருப்பதைப் பற்றி, சுகாதார வசதி இல்லை; குடிநீர் வசதி அறவே கிடையாது. அதிலே பொருத்தப்பட்டிருந்த மோட்டார் பழுதுபட்டு, பழுது பார்க்க எடுத்துச் சென்றவர்கள் பல மாதங்களாகியும் இது வரையிலே திருப்பிக் கொண்டு வந்து அதிலே பொருத்த வில்லை. குடிதண்ணீர் வசதி அறவே இல்லாமல் மக்கள் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைகளை உடனடியாகப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவ்வளவு அக்கறை இருந்தும், எம். எல்.ஏ., அவர்கள் இதை இந்த அவையிலே வந்து சொல்வதற்குப் பதிலாக, அமைச்சரிடத் திலோ, என்னிடத்திலோ சொல்லி, உடனடியாகத் தீர்த்திருக் கலாம். ஆக, எம்.எல்.ஏ., அவர்களுக்கு இதிலே அக்கறை இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது.